# இயல் 6.3 - விகிதம்

## பயிற்சி எண் :: 6.3.2.4.B

பல்வகை திறனறிதல் - பயிற்சி

### வினா

ஒரு பள்ளியில் 1800 மாணவர்களும் 90 ஆசிரியர்களும் 30 அலுவலர்களும் உள்ளனர்

இவ்வருடம் 435 மாணவர்கள் புதிதாகச் சேர்ந்துள்ளனர். தேர்ச்சிபெற்று 255 மாணவர்கள் விலகிச்சென்றுள்ளனர். என்றால், மேற்கண்ட விகிதத்தில் எத்தனை ஆசிரியர்களும் அலுவலர்களும் இருக்க வேண்டும்?

### விடை

இவ்வருடம் மாணவர்களின் எண்ணிக்கையில் நிகழ்ந்த மாற்றம் $\Rightarrow 1800 + 435 - 255 = 1980$

இரு வருடங்களுக்கிடையில் மாணவர்களின் எண்ணிக்கையில் நிகழ்ந்த மாற்றத்தின் விகிதம் $\Rightarrow 1980 : 1800 \Rightarrow \frac{1980}{1800}$

விகிதத்தின் எளிய வடிவம் $\Rightarrow \frac{1980 \div 10}{1800 \div 10} \Rightarrow \frac{198}{180}$

விகிதத்தின் எளிய வடிவம் $\Rightarrow \frac{198 \div 3}{180 \div 3} \Rightarrow \frac{66}{60}$

விகிதத்தின் எளிய வடிவம் $\Rightarrow \frac{66 \div 6}{60 \div 6} \Rightarrow \frac{11}{10}$

இதே விகிதத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் வரும் மாற்றம் $\Rightarrow 90 \times \frac{11}{10} = 99$

இதே விகிதத்தில் அலுவலர்களின் எண்ணிக்கையில் வரும் மாற்றம் $\Rightarrow 30 \times \frac{11}{10} = 33$

இவ்வருடம் ஆசிரியர்களின் எண்ணிக்கை 99 ஆகவும் அலுவலர்களின் எண்ணிக்கை 33 ஆகவும் உயர வேண்டும்.

Sum & solution prepared on Monday 7th June, 2021 :: 05:15 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.